ஓம் ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம

**8. தொடர்ந்து சுவடி ஆசான் திரு. ராஜேந்திரனிடம் ஆசி அறிவுரை நூல்களை கேட்டு அதன்படி செயல்பட அனுமதி வேண்டுகிறோம்.**

**ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம**

23.05.2024

1. தர்மத்தின் காவலனாய் இந்த கலியுகத்தில்
தனிப்பெரும் தவபலம் கூட்டி அரங்கன் யான்
கர்மத்தை போக்க வரும் அன்பர்கட்கு
கலியுகத்தில் கருணை கொண்டு தீட்சை ஆற்றலாக

2. ஆகவே இறங்கி அற்புதம் நடத்தி
அகிலத்தை காத்த அரங்கமகான் யானும்
முருகப்பெருமான் ஜோதியுள் கலந்து
முழுமை பெற வேண்டி என் தொண்டர் பெருமக்களுக்காக

3. ஆகவே அன்பர்களோடு பேசவும்
ஆற்றல்பட என் தொண்டர் பெருமக்களை வழிநடத்தவும்
இன்பமுற அருட்சுவடி வழியாக
இனிதே இறங்கி அரங்கன் யான் அருளுவேன்

4. இந்தவித சூழலுக்கும் இந்தவித காலத்தில்
பல்வேறு என் அவதாரத்தில்
பல்வேறு நாடி நூல் மாந்தர்கள் வந்திணைந்த போதும்
இன்பமுற என் ஜீவமுக்தி காலத்தில்

5. நன்மை கருதி என்னோடு வந்து இணைந்தவன்
நாடி மாந்தன் வானுல அரசனாகும்
அரசனிவன் எந்தனுக்கு பிறவித் தொடர்பு
அன்னதனால் அன்னவனை சேயோனாகவே ஏற்று

6. நூலோடு கலந்து அவனோடும் கலந்து
அன்னவன் இந்த குடிலையும்
அரங்கன் என் மார்க்கத்தையும்
விட்டு அகலா வண்ணம்

7. வழி நடத்தி வருகின்றேன்
வருகவே அரங்கனும் ஓங்காரக்குடிலின்
உயர் தொண்டுக்கும் ஓங்காரக்குடில்
அன்பர்கட்கும் உண்மைபட கடமையாற்றும்

8. தொண்டனாகும் அன்னவன் நூல் வழி
ஆக்கமுடன் அரங்கன் குடிலில்
எந்த சூழலிலும் சோர்வோ சுணக்கமோ
தளர்ச்சியோ வருங்காலம் பரிபூரணமாய் இறங்கி

9. ஆற்றலாக அன்பர்களை வழிநடத்தி
அரங்கன் யான் நூல் வழி பேசி
ஆற்றல்பட நிர்வாகம் சிறக்கவும்
அன்பர்கள் மனம் கனியவும் மகிழவும்

10. அவரவர்கள் வளர்ந்தோங்கி நிலை உயரவும்
அருட்சுவடி வழி குடிலின் நிர்வாகத்திற்கும்
தனிப்பட்ட தொண்டர்களின் விருப்பத்திற்கும்
அவர்களுக்கு உண்டான ஐயம் தீர்வதற்கும்

11. ஆற்றலாக வானுலக அரசன் இவன்
நூல்வழி இறங்கி அருள் புரிவேன்
அன்னதனால் அன்னவன் தொடர் தொண்டாற்ற
இந்தவித காலம் அன்னவனுக்கும்

12. அரங்கன் யான் கட்டளையிட்டுள்ளேன்
உள்ளபடி அவன் சேவையும்
உங்களோடு தொடர்ந்து உயர்வாக
தொடர் பணியாக சிறந்து

13. ஓங்காரக்குடிலின் வளர்ச்சியும் நிர்வாக செயல்களும்
எல்லா காலமும் சிறந்தோங்கி
விரிவுபட வளர தர்மப் பணிகள் சிறப்பதோடு
எந்தன் அவதார நோக்கமாக

14. ஞானசித்தர் காலமும் ஞானஆட்சி காலமும்
மாற்றங்கள் பெறுவதற்கு உண்டான சூழலும்
அதற்கு உகந்த உண்மையான
உயர்வான தலைமையும் மாற்றங்களையும்

15. ஞானப்படைகளையும் ஞாலமதில் அருட்சுவடி வழி
இன்னும் தேற்றி உயர்த்தி உலகோர்க்கு வழிநடத்தி அருள்புரிவேன்
அன்னதனால் இதுகாலம் வானுலக அரசன் சுவடி ஆசான்
ராஜேந்திரனுக்கும் இன்று கட்டளையிட்டுள்ளேன் ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–